

திருச்சியில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற. BLA 2 பாக முகவர்கள் கூட்டத்தில் கழக முதன்மை செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். அருகில் அருண் நேரு எம்.பி. எம்.எல்.ஏ.க்கள் பழனியாண்டி சௌந்தர பாண்டியன் மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி மாநகராட்சி மேயர் அன்பழகன் தொகுதி பார்வையாளர்கள் சந்திரசேகர், உத்திராபதி ,செல்வம் ,, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் ஆனந்த் மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், விஜயா ஜெயராஜ் ,கருணாநிதி, வழக்கறிஞர் ஓம் பிரகாஷ், சேர்மன் துரைராஜ், காஜாமலை விஜய், டோல்கேட் சுப்பிரமணி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியதால்

# முதல்வர் அறிவுறுத்தலின்படி திப்பம்பட்டியிலிருந்து ஏரிகளுக்குத் தண்ணீர்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் திறந்து வைத்தார்!


சேலம், ஜூலை. 1-

மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஏரிகளுக்கு தண்ணீர் திறந்து வைத்தார்.

மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, சேலம் மாவட்டம், திப்பம்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி ஆகியோர் முன்னிலையில் ஏரிகளுக்கு நேற்று முன்தினம் (29.06.2025) தண்ணீர் திறந்து வைத்தார்.

பின்னர், சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள் 12.06.2025 அன்று டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்பட்ட நீரானது 15.06.2025 அன்று கல்லணை வந்தவுடன் கல்லணை மதகுகளையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்திட வேண்டுமென விவசாயிகளுக்கு அறிவுறுத்தினார்.



மேட்டூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் 16 கண் பாலம் வழியாக உபரிநீர் வெளியேற்றப்படுவதை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று முன்தினம் (29.06.2025) நேரில் பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, திருச்சி மண்டல நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் தயாலகுமார், மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் சிவக்குமார், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் பொ.சுகுமார், மேட்டூர் அணை செயற்பொறியாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பேற்றது முதல் 2021, 2022, 2024 மற்றும் 2025 (இன்றையதினம்) ஆகிய 4 நீர் பாசன ஆண்டுகளில் மேட்டூர் அணையானது முழு கொள்ளளவை எட்டியுள்ளது. இதன் தொடர்ச்சியாக மேட்டூர் அணையிலிருந்து உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேலும், கிடைக்கும் உபரிநீரை குளங்கள், ஏரிகள் மற்றும் சரபங்கா போன்ற திட்டங்களுக்கு திருப்பி விட்டு நீரை சேமித்திடவும் தமிழ்நாடு அரசால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க, இன்றையதினம் மேட்டூர் அணையிலிருந்து காவிரி உபரிநீரை நீரேற்று மூலம் ஏரிகளுக்கு வழங்கும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்றுநிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு ஏரிகளுக்கு வழங்கும் வகையில் தண்ணீர் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையின் வெள்ள உபரிநீரை சேலம் மாவட்டம், சரபங்கா வடிநிலத்தில் உள்ள வறண்ட ஏரிகளுக்கு நீரேற்றம் மூலம் நீர் வழங்கும் திட்டம் ரூ.673.88 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மேட்டூர் அணையானது அதன் முழு கொள்ளளவான 120 அடியினை எட்டும் பொழுது அணையின் இடது கரையின் நீர் பரப்பு பகுதியிலிருந்து வெள்ள உபரிநீரை திப்பம்பட்டி பிரதான நீரேற்று நிலையம், வெள்ளாளபுரம் துணை நீரேற்று நிலையம், கன்னந்தேரி துணை நீரேற்று நிலையம் மூலமாக 82 ஏரிகள், குளங்களுக்கு நீர் சென்றடையும் வகையில் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்பொழுது 57 ஏரிகளுக்கு நீர் வழங்கும் வகையில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலம் 356 மில்லியன் கனஅடி நீர் நீரேற்றம் செய்யப்பட்டு, 3,364 ஏக்கர் நிலங்கள் பாசனம் மற்றும் குடிநீர் வசதி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மேட்டூர், ஓமலூர், எடப்பாடி மற்றும் சங்ககிரி வட்டங்களில் 32 கிராமங்களில் உள்ள 11 நீர்வளத்துறை ஏரிகள், 2 நகராட்சி ஏரிகள், 3 பேரூராட்சி ஏரிகள் மற்றும் 41 ஊராட்சி ஒன்றிய ஏரிகள் நீர் நிரம்ப வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து, காவிரி உபரிநீரை ஏரிகளுக்கு நீரேற்று மூலம் நிரப்பும் திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், திப்பம்பட்டி நீரேற்றுநிலையத்திலிருந்து மின் மோட்டார்கள் மூலம் நீரேற்று செய்யப்பட்டு மேச்சேரி ஊராட்சி ஒன்றியம், எம்.காளிப்பட்டி ஏரிக்கு நீர் வந்தடைந்ததை சுற்றுலாத் துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் மலர்தூவி வரவேற்றார்.

முன்னதாக மேட்டூர் அணை தனது முழு கொள்ளளவை எட்டியுள்ள நிலையில் 16 கண் மதகுகள் வழியாக உபரிநீர் வெளியேற்றப்படுவதை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின்போது, திருச்சி மண்டல நீர்வளத்துறை தலைமைப் பொறியாளர் தயாலகுமார், மேட்டூர் அணை கண்காணிப்பு பொறியாளர் சிவக்குமார், மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் பொ.சுகுமார், சரபங்கா வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் அப்புசாமி, மேட்டூர் அணை செயற்பொறியாளர் வெங்கடாசலம் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியம் ஏலகிரிமலை ஊராட்சி படகு இல்லத்தில் கோடை விழாவினை முன்னிட்டு மகளிர் திட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அங்காடியை அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா.இராஜேந்திரன் ஆகியோர் திறந்து வைத்து பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் .க.சிவசௌந்திரவல்லி, , சி.என்.அண்ணாதுரை எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜி, அ.நல்லதம்பி, அ.செ.வில்வநாதன், மாவட்ட கண்காணிப்பாளர் திருமதி.ஸ்ரேயாகுப்தா, , மாவட்ட வன அலுவலர் மகேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர்.உமாமகேஸ்வரி, சுற்றுலா அலுவலர் (பொ) ஆனந்தன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உள்ளனர்.

# ஏலகிரி மலையில் கோடை விழா தொடங்கியது!

## அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா. இராஜேந்திரன் பங்கேற்பு!

திருப்பத்தூர், ஜூலை. 1–

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியம் ஏலகிரிமலை ஊராட்சி கோடை விழா அரங்கத்தில் கோடை விழாவினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் 37 பயனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியம் ஏலகிரிமலை ஊராட்சி கோடை விழா அரங்கத்தில் கோடை விழாவினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆகியோர் தொடங்கி வைத்து, இயற்கை பூங்காவில் மலர் கண்காட்சியினையும், படகு இல்லத்தில் மகளிர் திட்டத்தின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள அங்காடியை திறந்து வைத்தும், பல்வேறு துறைகளின் சார்பில் 37 பயனாளிகளுக்கு ரூ.1.33 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், பல்வேறு விளையாட்டு போட்டிகளில் வெற்றிப் பெற்று முதல் 3 இடங்களை பிடித்த வீரர், வீராங்கனைகளுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

இவ்விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் திருமதி.க.சிவசௌந்திரவல்லி தலைமை வகித்தார். திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி, திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பரத நாட்டியம், கிராமிய நடனம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகளை நடைபெற்றதை ஏராளமான பொது மக்கள் பார்வையிட்டனர்.

இவ்விழாவில் மாவட்ட கண்காணிப்பாளர் திருமதி.ஸ்ரேயா குப்தா, மாவட்ட வன அலுவலர் மகேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் என்.கே.ஆர்.சூரியகுமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் டாக்டர். உமாமகேஸ்வரி, மகளிர் திட்ட இயக்குநர் தனபதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) செல்வி. மிரியாம் ரெஜினா, சுற்றுலா அலுவலர் (பொ) ஆனந்தன், தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் திருமதி.தீபா, ஒன்றியக்குழு தலைவர்கள் திருமதி.சத்யாசதீஸ்குமார், திருமதி.திருமதி, திருமதி.சங்கீதா, நகரமன்ற தலைவர்கள் திருமதி. சங்கீதா வெங்கடேஷ், திருமதி. காவியா விக்டர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட பையர்நத்தம் ஊராட்சியை சேர்ந்த இருளர் மக்கள் தமிழ் நாடு அரசு வழங்கும் இலவச வீட்டுமனைபட்டா,வீடுகள்,சாலை வசதி,குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்துதர வேண்டி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் பி. எஸ்.சரவணனிடம் கோரிக்கை வைத்தனர்.



பெரம்பலூர் மாவட்ட இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளரும், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை தலைவருமான கே.ஜி.மாரிக்கண்ணன் புதல்வர் எம்.மணிவரதன் சி.சிநேகா திருமண நிகழ்ச்சியில், போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கே.என்.அருண் நேரு எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கத்தாரில் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான செம்மொழி நாளை முன்னிட்டு அயலக அணிச் செயலாளர் எம்.எம். அப்துல்லா எம்.பி. வழிகாட்டுதலோடு, அமைப்பாளர் மதன்குமார் ஒருங்கிணைப்பில் கத்தார் அயலக தி.மு.க. NRTIA Qatar மற்றும் Naseem மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் மருத்துவ முகாம் 27 ஜூன், வெள்ளி அன்று சிறப்பாக நடைபெற்றது. கத்தார் தி.மு.க. அயலக அணி சார்பாக துணை அமைப்பாளர்கள் ஆரூர் பாலாஜி, கத்தார் ப.அப்துல் ரஷீத் தலைமையிலும், துணை அமைப்பாளர்கள் மேலூர் மதன், கோவை ஜி.எஸ்.ஆர்.சத்தியராஜ், ஆற்காடு என்.எஸ்.பரந்தாமன், வாளடி ராஜ்குமார் , ஹக்கீம் ஆகியோர் முன்னிலையிலும், நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளராக ICBF அமைப்பின் தலைவர் ஷானவாஸ் பாவா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## வழக்கறிஞர் ச. தியாகராஜன்

## ஜூலை 1 (2006)



**இளம்வயதிலேயே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட தளகர்த்தர்களான மன்னை நாராயணசாமி, கோ.சி.மணி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர்**

**நாகை நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**1965–ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**